**செய்தி வெளியீடு எண்: 85** **நாள்: 29.03.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.3.2013

நீலகிரி மாவட்டம், மஞ்சூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.டட்லி அவர்கள் 20.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, குற்ற புலனாய்வுத் துறை, பாதுகாப்பு பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.இஸ்ரேல் அவர்கள் 22.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.கிருஷ்ணன் அவர்கள் 25.3.2013 அன்று இரவு ரோந்து பணியில் இருந்தபோது, விழுப்புரம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், இருப்புப் பாதை காவல் நிலையம், தனிப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.கண்ணன் அவர்கள் 25.3.2013 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், நில அபகரிப்பு தடுப்புப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. O.விஜயராம் அவர்கள் 26.3.2013 அன்று மதுரை மாவட்டம், சமயநல்லூர், ஊர்மெச்சிகுளம் அருகே ரயில்தண்டவாளத்தை கடந்த போது ரயிலில் அடிபட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், உயர்நீதிமன்ற காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.சோபனம் அவர்கள் 26.3.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. L.ராமன் அவர்கள் 26.3.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு சிறப்பு காவல்படை 3ம் அணி, வீராபுரத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு.M.பஞ்சாட்சரம் அவர்கள் 27.3.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள் இஸ்ரேல், விஜயராம், பஞ்சாட்சரம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கிருஷ்ணன், கண்ணன், சோபனம், ராமன் மற்றும் தலைமைக் காவலர் டட்லி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர்கள் இஸ்ரேல், பஞ்சாட்சரம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமன், தலைமைக் காவலர் டட்லி, மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கண்ணன் மற்றும் சோபனம், சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் மற்றும் ரயில் விபத்தில் காலமான உதவி ஆய்வாளர் விஜயராம் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**